விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 | தை 18 | ஜ-அவ் 9 | இதழ் 347
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 31-1-1985

## “யுத்தமுனை உருவாகிறது

## விரைவில் பத்திரிகைத் தணிக்கை!

### ராஜாங்க அமைச்சர் தகவல்

[கொழும்பு]

‘‘பாதுகாப்புப் படையினர் கொடூரமான குழுவினருடன் போராடிவருகின்றனர் இன்று நமது நாட்டில் யுத்தமுனை உருவாகி இருக்கிறது’’ என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்,

பயங்கரவாத சம்பவங்கள் தொடர்பான செய்திகளுக்கு பத்திரிகை தணிக்கை கொண்டு வர அரசு ஆலோசித்துவருவதாகவும் அடுத்தசில தினங்களில் அமுலுக்கு வரும் என்றும் அமைச்சர் கூறினர்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கை இன்று எதிர் நோக்கி இருப்பது போன்ற யுத்தநிலை ஏற்படும்போது செய்திகள் வெளிவருவதை காலம் தாழ்த்துவதும் யுத்த

(4-ம் பக்கம் 4-ம் கலம் பார்க்க]

## முல்லைத்தீவில் தந்தையும் மகனும் கடத்தப்பட்டனர்!
## மத குருவுடன் ஜீப்பில் சென்றபோது சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சகல இன மக்கள் மத்தியிலும் பிரபலமானவரான சமூக சேவையாளர் ஒருவரும் அவரது மகனும் நேற்றுக் கடத்தப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பிரஜைகள் குழுவுடன் நெருங்கிய தொடர்புடையவரான இவர் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து முல்லைத்தீவில் பதற்ற நிலை உருவாகியுள்ளது.

கத்தோலிக்க குருவான அருட்திரு யோகநாதன் அடிகளாருடன் அவரது ஜீப்பில் அலம்பில் தேவாலயத்துக்கு சென்றுவிட்டு திரும்பியபோது இனந்தெரியாத இளைஞர்கள் தந்தையையும் மகனையும் கடத்திச்சென்றதாக கூறப்படுகிறது.

(3-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க]

# ரூ. $6\frac{1}{2}$ கோடி வங்கிக் கொள்ளை!

## அண்மைச் சரித்திரத்தில் முதல் திகில் சம்பவம்!!

( ாழ்ப்பாணம்)

**யாழ். ஹட்டன் நாஷனல் வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதி ஆறரைக்கோடி ரூபா என உத்தியோகபூர்வமற்ற மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.**

உலகின் மிகப்பெரிய வங்கிக்கொள்ளை என்று மதிப்பிடப்பட்டுள்ள இந்தக் கொள்ளையின்போது கோவில் சொத்துக்களான கோமேதகம், வைடூரியம், பவளம போன்ற நவரத்தினங்களும் ஏராளமான நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கோவில் சொத்துக்களின் தற்போதைய பெறுமதியைக் கணிப்பது சிரமமானதாக இருந்தபோதிலும் உத்தேச பெறுமதியைக்கொண்டு கொள்ளைபோன பொருட்கள் ஆறரைக் கோடி இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## அம்புலன்ஸ் வண்டி குண்டு வைத்து தகர்ப்பு!
### நால்வர் ஸ்தலத்தில் பலி

[மட்டுநகர்]

மட்டக்களப்புக்கும களுவாஞ்சிக்குடிக்குமிடையேசென்றுகொண்டிருந்த அம்புலன்ஸ் வண்டியொன்றுகுண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

இதில் பயணம் செய்த நால்வர் பலியாதாகவும், இவர்கள் நாலவரும் தமிழர்கள் என்றும் கூறப்பட்டது

இச்சம்பவத்தின்போது 6 பேர் காயமடைந்தனர். அம்புலன்ஸ் சாரதியான முஸ்லிம் படுகாயமடைந்துள்ளார்.

3-ம் பக்கம் 5ம்-கலம் பார்க்க]

### முடியாத காரியம்

(கொழுபு)

வடக்கு, கிழககிற்கு உணவுப் பொருட்களையும் எரிபொருளையும் அனுப்பி வைப்பது முடியாத காரியமாகிவிட்டதாக ராஜாங்க அமைச்சு நேற்று அறிவித்தது.

## வங்கி பெட்டகம் வயல்வெளியில் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நாஸனல் வங்கியில நேற்றுமுன் தினம் கொள்ளையடிக்கப்பட்ட இரு பெட்டகங்களும் வெட்டப்பட்ட நிலையில கோம்பயன் மணல் மயானத்துக்கு முன்னுல் உள்ள வயல்வெளி ஓரமாக நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டது.

குறிப்பிட்ட இரு பெட்டகங்களும் நகைகளுடன் இராணுவமுகாமுக்குக் கொண்டு செல்வதற்கு வங்கியில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்

(3ம் பக்கம் 5-ம் கலம் பார்க்க]

## திருமலை, பட்டிருப்பு தேர்தல் கடைசிநேரத்தில் ஒத்திவைப்பு

(கொழும்பு)

திருகோணமலை, பட்டிருப்பு, முல்கிரிகல தொகுதிகளுக்கான தேர்தலுக்கு நியமனப்பத்திரங்கள் ஏற்கப்படும் திகதி கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இத் தொகுதிகளுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று வியழக்கிழமை ஏற்றுக்கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து ஆராயப்படட பின்னர் பொதுசன பாதுகாப்பு

(3-ம் பக்கம் 5ம கலம் பார்க்க)

## பிரதமரின் வெளிநாட்டு பயணம்

(கொழும்பு)

பிரதமர் திரு ஆர். பிரேமதாசாவும் அடுத்த மாதம் 6-ம் திகதி வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்கிறார்.

பாங்கொக்கில் நடைபெறவுள்ள சுற்றுடல் சம்பந்தமான ஆசிய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் செல்லும் பிரதமர் சிங்கப்பூருக்கும் செல்வார்.

### சிறிமா கூறுகிறார்
## “வடக்கில் புலிகளின் ஆட்சி; அரசு அங்குசெயற்படவில்லை!”

(கொழும்பு)

‘‘வடக்கில் அரசாங்கம் செயல்படவில்லை. அப்பகுதி புலிகளினுல் ஆட்சி செய்யப்படுகிறது பஸ்களோ, ரயில்களோ அங்கு செல்வதில்லை. இந்நாட்டின் சரித்திரத்தில் முதல் தடவையாக சிங்கள மக்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்’’

குளியாப்பிட்டியில் நடந்த

(4-ம் பக்கம் 3-ம் கலம்பார்க்க)

## தேசிய பாதுகாப்பு நிதி திரட்டவேண்டாம்
### பணிப்பாளர்களுக்கு கல்விஅமைச்சு உத்தரவு

(கல்வியங்காடு)

தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கென எது விதமாகவும் நிதிகளைத் திரட்டவேண்டாம் என நாட்டின் சகல கல்விப் பிராந்தியங்களின் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு எம். பி. சி. டி சில்வா ஒப்பமிட்டு அனுப்பி

(3-ம் பக்கம் 5-ம்கலம் பார்க்க]

### மின்கம்ப மரணம்
## இறந்தவர் மனநோயாளி; பென்சன் பணம் மறைவு!

(யாழ்ப்பாணம்)

உரும்பராயில் மின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த வயோதிபரின் சடலம் உரும்பிராயைச்சேர்ந்த ப. பரராசசிங்கம் என்று அடையாளம் காணப்பட்டு இம்மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ் பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் மரண விசாரணை நடத்தினுர்.

இறந்தவர் ஒரு பட்டதாரி ஆசிரியராக இருந்து இளைப்பாறியவர் என்றும், 24ம் திகதி பென்சன் பணம் எடுக்

(4-ம் பக்கம் 3-ம்கலம் பார்க்க)

## சகல சட்டத்தரணிகளினதும் கருத்துக்களை அறிய முடிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் உள்ள நிதிமன்றங்களில், சகலவழக்குகளையும், காலவரையின்றி ஒத்திபோடுமாறு யாழ் சட்டத்தரணிகள் சங்கத்தினர் செய்தமுடிவுக்கு, நீதிச்சேவை கமிட்டியின் செயலாளர்அனுப்பியபதில் தொடர்பாக ஆராய்வதற்கு நேற்றுக்கூடிய யாழ். சட்டத்தரணிகள், சங்கம் எவ்விதமுடிவும் எடுக்கவில்லை.

யாழ். சட்டநூலகத்தில் சங்கத்தலைவர் திரு. எஸ் ஆர். கனகநாயகம தலைமையில் கூடிய விசேட பொதுக்கூட்டத்தில் 39 சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர் மல்லாகத்தைசேர்ந்த சில சட்டத்தரணிகளும் கலந்துகொண்டு தங்கள்கருத்தைத் தெரிவித்தனர்

(--ம் பக்கம் 3ம் கலம் பார்க்க

## இந்த வங்கியும் குருநகர் செல்லும்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஹட்டன் நாஷனல் வங்கி குருநகருக்கு மாற்றப்படவிருப்பதாகவும், குருநகரில் அதற்கான ஒரு கட்டடம் தேடப்படடு வருவதாகவும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்

(3-ம் பக்கம் 4-ம்கலம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு உஷா சீலிங் மின் விசிறிகளும் [Ceiling Fans] இரண்டு G. I. Pipe சகிதம் T. V. அன்ரெனுவும் உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு:- 74, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர். 1579

பல்வேறு கவர்ச்சிகர நிறங்களில் அழகானதும், நீடித்துப் பாவிக்கக் கூடியதுமான கண்ணாடிஇழையாலான குசினி பேசின் (Sink), Drain Board உடன் விற்பனைக்குண்டு. விலை 750/- ரூபா மட்டுமே ட்ரேட் சென்ரர், ஹோம் பினன்ஸ் லிமிட்டட், 155 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1484

ரீ.வி, டெக் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், கலட்டிப்பிள்ளையார் கோயில், கரணவாய் தெற்கு, கரவெட்டி. 1611

யாழ்ப்பாணம் பிரதான வீதியை வாயிலாக்கொண்கட வியாபார இடமாசப்பாவிக்கக் கூடியதாக அமைந்ததும் மூன்ரும் குறுக்குத்தெரு ஊடாக பின்பாதையுள்ளதும் பின்பக்கம் வசிக்கக்கூடிய வசதியுமுள்ள காணிவிற்பனைக்கு உண்டு. தொலைபேசி 23795 யுடன் தொடர்புகொள்க விளம்பர இல. 1573 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 1573

## சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகியகாலத்தில் Processing And Printing செய்துகொள்ள நாடுங்கள் கொழும்பு ஸ்ருடியோ. யாழ்ப்பாணம். 1511

## வகுப்பு

ஹோமியோபதி பேரவையினல் ஏப்ரல் 1985 ல் நடாத்தப்படவிருக்கும் வைத்தியப்பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புகள் அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் 07-02-85 ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோமியோபதி வைத்தியசாலை, 784/5 பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம். 1597

## காணவில்லை

மஸ்கெலியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட மலர் என்று அழைக்கப்படும் சிறுமியை 25-1-85 தொடக்கம் காணவில்லை இவரது தோற்றம், மெலிந்த உடல், சிவப்பு நிறம் உயரம் 4 அடி 11 வயது மயிர் கட்டையாக வெட்டியுள்ளார். கடைசியாகக் காண படும் பொழுது ரோசும், மருனும் கலந்த நிறச் சட்டை அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் செ அருட்பிரகாசம், சிவபூரணி இல்லம், குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் (1562)

# வெற்றுச்சாக்கு விற்பனை

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 6000 வெற்றுச்சாக்குகள் வரையில் விற்பனைக்கு இருக்கிறது. கொள்வனவு செய்யவிரும்புவோர் தமது கேள்விகளை வைப்புப்பணம் ரூபா 300/- ம் கேள்விப்பத்திரப்பணம் ரூபா 10/- ம் செலுத்தி சங்கத்தில் பெறும் படிவத்தில் 15-2-85 வியாழக்கிழமை காலை 10 மணிக்குமுன் சங்கத்தில் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அல்லது சங்கத்திலிள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இட வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**

சாவகச்சேரி
ப நோ. கூ. சங்கம்.
28-1-85.

1601

# பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வட்டுக்கோட்டை என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற கனகரத்தினம் ஜெயசிங்கம் என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

—மரணமெய்தியவர்.

மரண சாதன நியாயாதிக்கம் } இல. ரி/230

கனகரத்தினம் ஜெயசிங்கம் கைம்பெண் நிர்மலா மூளாய் ரோட் வட்டுக்கோட்டை,

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்துக்களை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதிற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்படடுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985 ம் ஆண்டு பங்குனி மாதம் 27-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப் படுகின்றலர்

1985-ம் ஆண்டு தை மாதம் 16-ம் திகதி

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

தயாரித்தவர்
க. குணரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி.

1595

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்ய**

# நவாலி விதானையார்



நவாலிக் கிராமத்தில் 'விதானையார்' என்ருல் மறைந்த பெரியயவர் பரராஜசிங்கம் பரராஜசேகரனையே குறிக்கும்பெருமகன்.

அட்டகிரி முருகன் குடிகொண்ட நவாலியின் தலைமைக்காரனுகவும், வழிபடுவோர் சங்கத்தலைவராகவும் பொலிஸ்-பொது மக்கள் நல்லுறவு சபைததலைவராகவும் இருந்து அளப்பரிய சேவையாற்றியவர். போர்ணி நகர் சென்று பல ஆண்டு காலம் உழைத்து அங்கிருநது ஊர் முன்னேற்றத்துக்கு தன்னுலான பொருளுதவி செய்து பின் மீண்டும் ஊர்திரும்பி சேவையைத் தொடர்ந்த அமரர் எமை விட்டுப் பிரிந்தது பெரும் இழப்பே.

—க. கௌரிகாந்தன்

# JAFFNA UNITED CLUB

மேற்படி கழகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 3-2-85 காலை 10-30 மணிக்கு கழக மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் சமுகம் தருக.

R. சிவலிங்கம்
தலைவர்.

1603

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ. உ.)

# தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

கல்வித் தகமைகள்:-

க. பொ த. (சாதாரணம்) தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம்:-

225 — 395

10 × 7 — 12 50 × 8

வயதெல்லை 40க்கு மேற்படலாகாது. விண்ணப்ங்கள் யாவும் ''தலைவர், சங்கானை ப.நோ.கூ. சங்கம், சங்கானை'' என்னும் முகவரிக்கு 9-2-85ம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும் சங்கத்தால் வழங்கிய விண்ணப்பப் படிவத்தில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் ரூபா 2/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்.

சங்கானை,
29-1-85. 1606

# வான்கள் கடத்தல்!

(யாழ்ப்பாணம்)

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் வான்ஒன்று நேற்று நண்பகல் துப்பாக்கிமுனையில் கொள்ளையமக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்புத் திணைக்களத்துக்கு சொந்தமான வானும் நேற்று முன்தினம் வசாவிளானில்வைத்து கடத்தப்பட்டது.

# துண்டிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கும் மன்னுருக்குமிடையேயான தொலைத் தொடர்பு முற்ருக துண்டிக்கப்பட்டுள்ளது

துணுக்காயிலுள்ள தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலயத்தில் நேற்றுமுன்தினம் சகல சாதனங்களும் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தநிலை ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது,

இதனுல் யாழ் - கொழும்பு சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

# இன்று சான்றிதழ் கிடைக்கிறது

(கொழும்புத்துறை)

கோப்பாய்க் கல்வி மூலவள நிலையமும், இலங்கைப் பனை அபிவித்திச் சபையும் இணைந்து நடாத்திய பனம் பொருள் கைப்பணிப் பயிற்சியின் முதலாவது குழுவில் பயிற்சிமுடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் அமைந்துள்ள கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ வ. தங்கராசா தலைமையில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணக வாழ்வின்

# 31-வது நாள் நினைவஞ்சலி

## திருமதி எம். ரி. வின்சென்ற்

(Retired Staff Nurse, Jaffna Government General Hospital)

மலர்வு: 08 - 01 - 1925
உதிர்வு: 02 - 01 - 1985



சில்லையூர் நகரில் சிறப்புடன் வாழ்ந்தாய் சீருடன் நின்தன் பணிகளைச் செய்தாய் மட்டுநகர், காங்கேசன், யாழ்நகர், வைத்தியசாலை வளமுடன் நோயாளிகள் வாழ்வு பெறச் செய்தாய், நின்பணி பெற்ற பல கோடி மக்கள் நாம் உன் பிரிவு உணர்ந்து தினம் வருந்துகிரும். உன் ஆன்மா சாந்திபெற இறையருள் வேண்டுகிரும்.

அன்னரின் ஆன்ம சாந்திக்காக சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் 01 - 02 - 1985 வெள்ளிக்கிழமை, காலை 6-15 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும் சகோதரிகள், மைத்துனர், பிள்ளைகள்.

''பிறேம'' இல்லம் சில்லாலை (1594)

யாழ்ப்பாணத்து ''இசைவல்லார்'' குபிளான் [காலஞ்சென்ற] சு. செல்வத்துரை அவர்களின் அன்பு மனைவி

# செ. இரத்தினம்மாவின் ஓராண்டு நினைவஞ்சலி



எமையீன்ற அன்னையெ-
னும் தெய்வமே நீ
இவ்வளவு கடிதினிலே
மறைவாய் என்ற
கனவிலும் நாம்
நினைத்திலமே அந்தோ
எம்மைச்
கரையறியா மரக்கலம்
போல்த் தவிக்க
வைத்தாய்
தந்தைக்காக எமக்கிருந்த
பெரியண்ணன்
செல்வரட்ணத்தையுப்
ஆனி இருபத்து ஆரும் -
தேதி உனனிடத்தில்
அழைத்திட்டாயே
எம்அருமை அன்னையே நீ
எங்கிருந்தாலும்
உமது ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல சறுகுரு
மகராஜி அருள் புரிவான்.

அம்மா உங்கள் பிரிவால் வாடும்

பிள்ளைகள்:- [காலம்சென்ற] செ செல்வரத்தினம், கௌரிமனேகரி, கமலநாதன், அபிராமி தேனுகா, சரஸ்வதி மனேகரி, கோமதி தேவி

பெருமக்கள்:- விஜயலட்சுமி, சரோஜினி புவனேஸ்வரி, புஷ்பமலர், கணேசரத்தினம், மகேசகுமார்

மருமக்கள்:- சபாரத்தினம், கைலைநாதன், பத்மநாதன், யோகநாதன், மகாதேவன், புனிதராஜசிங்கம், ஷாந்தினி

பேரப்பிள்ளைகள்:- நாகராஜன், ராஜேஸ்வரி, சுதர்சன், சுதர்சினி, சுபாசினி, ஜெயப்பிரியா, உமா.

செ. கமலநாதன்
[மின் பொறியியலாளர், இலங்கை மின்சாரசபை கொழும்பு]

1599 வேதக் கோவிலடி, கொக்குவில் மேற்கு.

# வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா செல்வதற்கான சகல ஒழுங்குகளும்,

பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான சிறந்த வசதிகளும்,

குறைந்த செலவில் காலதாமதமின்றி செய்துகொடுக்கப்படும.

PRASAD REST,
11-Upatissa Road,
BAMBALAPITIYA.
PHONE: 588855

வ. நல்லையா,
அலவத்தை,
அளவெட்டி.

[1596]

# வட சென்னை, பெரம்பூர், எழும்பூர் தொகுதிகளுக்கான தேர்தல்: தி. மு. க. வெற்றி

சென்னை, ஜன. 30

தமிழ்நாட்டில் வட சென்னை லோகசபைத் தொகுதியிலும் பெரம்பூர், எழும்பூர் சட்டசபைத் தொகுதிகளிலும் தி. மு. க. வெற்றி பெற்றுள்ளது.

வட சென்னை லோகசபைத் தொகுதியில் தி. மு. க. வேட்பாளர் திரு என். வி. என். சோமு வெற்றி பெற்றுள்ளார். இவர் முன்னாள் லோக சபைத் துணை சபாநாயகரும், இந்திரா காங்கிரஸ் வேட்பாளருமான திரு. ஜி லக்ஷ்மணனை 36,450 கூடுதல்வாக்குகளால் தோற்கடித்துள்ளார்.

பெரம்பூர் சட்டசபைத் தொகுதியில் தி. மு. க. வேட்பாளர் திரு. பரிதி இளவழுதி வெற்றி பெற்றுள்ளார் இவர் அ. தி. மு க. வேட்பாளர் திருமதி சத்தியவாணி முத்துவை 7,204 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்துள்ளார்.

எழும்பூர் தொகுதியில் தி. மு. க. வேட்பாளர் திரு. எஸ். பாலன் 2,549 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார்.

இதன் மூலம் லோகசபையில் தி. மு. க.வின் பலம் இரண்டாக அதிகரிக்கிறது. தமிழ்நாடு சட்டசபையில் தி. மு க வின் பலம் 22 ஆக அதிகரித்துள்ளது

### ஆந்திரப் பிரதேசம்

ஆந்திரா பிரதேசத்திற்கான இரண்டு லோகசபைத் தொகுதித் தேர்தல்களிலும் தெலுங்குதேசம் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம் தெலுங்குதேசம் கட்சியின் பலம் லோகசபையில் 30 ஆக உயர்கிறது.

### உத்தரப் பிரதேசம்

உத்தரப் பிரதேசத்திலுள்ள செயில் லோகசபைத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

### மத்தியப் பிரதேசம்

மத்தியப்பிரதேசம்போபால் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது இதன்மூலம் மத்திய பிரதேசத்திலுள்ள 40 லோக சபைத் தொகுதிகளையும் இக் கட்சியே கைப்பற்றியுள்ளது.

ஐந்து லோகசபைத் தொகுதிகளுக்கான தேர்தலின் இரண்டு இடங்களை இந்திரா காங்கிரஸ் கட்சியும், தெலுங்கு தேசம்கட்சி இரண்டு இடங்களையும், தி. மு. க. ஒரு இடத்தையும் கைப்பற்றியுள்ளன. (வெ)

## காங்கேசனில் நேற்று

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிட்டெட்டின் களஞ்சிய அறையில் மின்சார கணக்கிடும் 'மக்கர்' இயந்திரம் இனம்தெரியாத துப்பாக்கி இளைஞர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12மணியளவில் வான் ஒன்றில் வந்த 4 துப்பாக்கி இளைஞர்கள் அங்கிருந்த காவலாளிகளை பயமுறுத்தி மேற்படிகொள்ளையை நடத்தியுள்ளனர்.

இந்த ஸ்தாபனத்தில் இம் மாதத்தில் இடம்பெற்ற மூன்றுவது கொள்ளை இதுவாகும். (சூ)

## திருத்தம்

மகாத்மா காந்தி நினைவாக நேற்றைய தினம் 'ஈழநாடு' 3-ம் பக்கத்தில் வெளிவந்த கட்டுரையின் தலைப்பில் 39-வது நினைவு தினம் என்றிருப்பது தவறு 37-வது நினைவு தினம் என்றிருக்கவேண்டும். — (ஆ-ர்)

## திருமலை, பட்டிருப்பு---

[1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

சட்டத்தின்கீழ் ஒத்திவைப்பு குறித்து அறிவிக்கப்பட்டது.

முல்கிரிகலை இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்வதை தடுத்துநிறுத்துமாறு உயர் நீதிமன்றமும் நேற்று தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

## தேசிய பாதுகாப்பு---

(1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

யுள்ள மேற்படி சுற்று நிருபத்தில் கல்விப் பணிப்பாளர்கள் பாதுகாப்பு நிதிக்கென தத்தம் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளிலும் வேறு விதத்திலும் 'பாதுகாப்பு நிதியை' சேகரிக்க வேண்டாம் என்றும் இதனை சகல பாடசாலைத் தலைவர்களுக்கும் தெரியப்படுத்தும் படியும் கேட்டுள்ளார்

இச்சுற்று நிருபத்தில் 'கல்வி அமைச்சு தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கு' மிகப்பெருமளவிலான நிதியை கொடுக்க எண்ணி இருக்கிறது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## "இலங்கைத் தமிழர் பிரச்னை: அணிசேரா அமைப்பு மூலம் மத்தியஅரசு தீர்வு காணவேண்டும்"

### பாரதிய ஜனதா கட்சி தீர்மானம்

சென்னை, ஜன. 30

"இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அணிசேரா அமைப்பு, மனித உரிமைகள் இயக்கம் மூலம் தீர்வுகாண இந்திய மத்திய அரசு முயலவேண்டும்'

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு பிரிவுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரன் பதவியேற்கும் வரை இடைக்கால அரசு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் இக்கட்சி தமிழ்நாடு ஆளுநரைக் கேட்டுள்ளது.

## எம். ஜி. ஆர். சனிக்கிழமை வெளியேறுவார்

சென்னை, ஜன. 30

நியுயோர்க் புறூக்ளின் மருத்துவ மனையிலிருந்து தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் எதிர் வரும் சனிக்கிழமை வெளியேறுவாரென்று தெரிவிக்கப்பட்டது.

திரு. ராமச்சந்திரனின் உடல்நிலை நன்றாகவுள்ளதாக இம்மருத்துவ மனையின் வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## இலங்கை கடற்படை இந்திய மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்!

### 9 மீனவர், 2 படகைக்காணவில்லை!!

சென்னை, ஜன. 30

இந்தியக் கடற்பிராந்தியத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த பத்து இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி, துன்புறுத்தியுள்ளனர். இந்திய மீனவர்கள் பிடித்த மீன்களையும் இலங்கைக் கடற்படையினர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 இந்திய மீனவர்களையும் கச்சதீவுக்கு அருகில் வைத்து, இந்தியக் கடலோரக் காவல்படையினரிடம் ஒப்படைப்பதற்குச் சிலமணித்தியாலங்களுக்கு முன்னரே இச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்டது

இந்திய மீனவர்கள் 9 பேருடன் 2படகுகளைக் காணவில்லை யென்று இராமேஸ்வரம் மீனவர் சங்கச் செயலாளர் திரு. அருளானந்தம் புகார் செய்துள்ளார்.

கச்சதீவுக்கு அருகே 6 இலங்கைக் கடற்படைப் படகுகள் கடமையாற்றிவருகின்றனஎன்றும் தெரிவிக்கப்பட்டது.

இப் படகிலுள்ளவர்களுக்கு தேவையான உணவுவகைகள், அங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ள கப்பல் ஒன்றிலிருந்து வழங்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

# சிங்கள மக்களல்ல; ஜே. ஆர். அரசாங்கமே எமது பொது எதிரி!

## ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் சிங்கள மக்களுக்கு விளக்கம்

[கொழும்பு]

"இந்த நாட்டில் சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்னைகளைச் சமாளிக்கமுடியாமல் அரசாங்கம் காணப்படுகின்றது. இவ் இயலாமையிலிருந்தும் சிங்களமக்களின் கவனத்தை திசை திருப்பவே தமிழர் பிரச்னையை அரசு பெரிதுபடுத்துகின்றது" என்று ஈழம் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ பி. ஆர் எல் எவ் ] இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்த நாட்டின் சிங்களச் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் ஒரு வேண்டுகோள்என்ற பிரசுரத்திலேயே மேற்கண்ட தகவலை இந்த இயக்கம் வெளியிட்டுள்ளது

இப்பிரசுரத்தில் ஈ பி ஆர் எல் எவ் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிங்கள மக்களுடன் தமிழர் பிரச்னைகுறித்து நேரடியாகத் தொடர்புகொள்ள எமது இயக்கம் விரும்பியுள்ளது.

யூ. என் பி அரசாங்கம் ஜே ஆர். ஜயவர்த்தன தலைமையில் பதவிக்குவந்த காலம் முதல் வெறுப்புணர்வையும் வன்செயல்களையுமே தமிழீழ மக்கள்மீது தூண்டிவருகின்றது இதேவேளை சிங்கள மக்களின் அரசியல், பொருளாதார உரிமைகளையும் இந்தஅரசாங்கம் ஒடுக்கிவருகின்றது

1983-ஜுலை வன்செயல்களின்போது அரசியல் காடையர்கள் உங்களது பாடசாலைச் சிறுவர்களை வன்முறைகளில் எப்படி ஈடுபடுத்தியிருந்தார்கள் என்பது உங்களுக்குநன்கு தெரியும் தமிழர்களின் உடமைகளைக் கொள்ளையிட அவர்களை அனுமதித்ததுடன், வீடுகளுக்கும் தீயிடச் செய்தனர்.

எனவே சிங்களமக்களின் கலாசாரம், நாகரிகம் என்பவற்றைக் குட்டிச்சுவராக்கும் ஒரு சந்ததியினர் தற்போது வளர்ந்துவருவதை ஜுலை சம்பவங்கள் எடுத்துக் காட்டியுள்ளன

சி ஐ. ஏ , மொசாட் மற்றும் இனவாத தென்னாபிரிக்க நாடுகளுடன் ஜே. ஆர். அரசாங்கம் தொடர்பு வைத்துள்ளது. இத்தொடர்பு இலங்கைத் தமிழர்களை மேலும் ஒடுக்குவதுடன், சிங்களத் தொழிலாளர் வர்க்கத்தையும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது

அரசாங்கத்தின் இத்தகைய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நீங்கள் பகிரங்கமாக ஆட்சேபம் தெரிவிக்கவேண்டும். இல்லையேல் உங்களது எதிர்காலமும் சூனியமாகிவிடும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை

ஜுலைக் கலவரத்தின்போது ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கு சில சிங்களமக்கள் புகலிடம், உணவு, மற்றும் ஆதரவளித்ததை நாம் மறந்துவிடமாட்டோம் சிங்கள மக்களில் பலர் தமிழீழ மக்கள் படுகொலை செய்யப்படுவதை விரும்பமாட்டார்கள் என்பதையும் நாமறிவோம்.

எனவே இத்தகைய படுகொலைகளை நிறுத்தப்படவும், இன ஒற்றுமை ஏற்படவும் தமிழ் மக்களுக்கெதிராக ஆயுதமேந்தியிருப்பவர்களை எதிர்த்து நீங்களும் ஆயுதமேந்தவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

ஈ பி ஆர். எல். எவ். இயக்கம் உங்களது இந்த ஆயுதப் போராட்டத்திற்கு தன்னாலான உதவிகள் அனைத்தையும் வழங்கும்.

தமிழர்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாகியிருக்கின்றபோதிலும் எந்தவொரு அப்பாவிச் சிங்களவனையும் அவர்கள் தாக்கவில்லை அவர்களது உடமைகளுக்குச் சேதம் விளைவிக்கவும் முயற்சிக்கவில்லை

ஜே ஆர். ஜயவர்த்தனவின் பாஸிஸ அரசாங்கம் மட்டுமே எமது பொது எதிரியாகும். (கி)


ரீகல் மினி

தினசரி 10-15, 1-15 மட்டும்

பாண்டியன்.., ரேவதி நடிக்கும்

பாரதிராஜாவின்

புதுமைப் பெண்

லிடோ சினிமா

தினசரி 10-30, 2-00

சிவாஜி-கே.ஆர். விஜயா ரஜனி

ஜஸ்ரிஸ் கோபிநாத்

வெலிங்டன்

(யாழ். நகர்)

10-30, 2-15,

கமல் - மாதவி

டிக் டிக் டிக்

(கலர்)


## முல்லைத்தீவில் தந்தையும்.....

[1-ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

கடந்த 35 வருடமாக முல்லைத்தீவில் வசித்துவந்த சிலாபத்தைச் சேர்ந்த லியோ பெர்னண்டோ வயது 62) என்பவரும் அவரது மகனுமே கடத்தப்பட்டவர்களாவர்.

இவர்கள் கடத்தப்பட்டது குறித்து கத்தோலிக்க குரு, இராணுவமுகாமுக்கு புகார் செய்தார். இச்செய்தி வெளியானதும் முல்லைத்தீவில் மக்கள் மத்தியில் பதற்றநிலை உருவாகியுள்ளது.

சிலாபத்தைச் சேர்ந்த இவர் ஒரு தமிழரே என்றும் ஆனால் சிங்கள பெண்ணையே திருமணம் செய்ததாகவும் தெரிகிறது.

## இந்த வங்கியும்...

[1ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி]

தன

குருநகருக்கு வங்கி மாற்றப்பட்ட பின்னரே, வழக்கம்போல வங்கி வேலைகள் மீண்டும் நடைபெறும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

வங்கியில் வைக்கப்பட்டிருந்த குண்டுபற்றி இராணுவத்திற்கு அறிவிக்கப்பட்டதாகவும், அக்குண்டு நேற்று அகற்றப்பட்டு விட்டதாகவும், கூறப்படுகிறது

வங்கி பின்பக்க வாசல் மட்டுமே தற்போது திறக்கப்பட்டு வங்கி உத்தியோகத்தர்கள், கடமையில் ஈடுபட்டுவருகிறார்கள். [க]

## அம்புலன்ஸ்---

[1ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி]

கல்முனைக்கு சென்றுவிட்டு நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது குண்டு வெடித்ததாக கூறப்படுகிறது

ஆஸ்பத்திரியில் தற்காலிக தொழிலாளர்களாக கடமையாற்றும் தேவராஜா, பெரியபிள்ளை ஆகியோரும் 60 வயது மூதாட்டி ஒருவரும் சிறு குழந்தை ஒன்றுமே பலியானவர்களாவர்.

## வங்கி பெட்டகம்---

[1ம்பக்க 2ம்கலத் தொடர்ச்சி)

டிருந்த வேளையில் இனந்தெரியாத இரு நபர்கள் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துச் சென்றதுதெரிந்ததே. (மா)

## மணிவாக்கு

உண்மையாய் சிந்திப்பாய், உன் சிந்தனை உலகின் பசியைப் போக்கும்; உண்மையாய் பேசுவாய், உன் ஒவ்வொரு சொல்லும் பயனுள்ள விதைகளாகும்; உண்மையாய் வாழ்வாய், உன் வாழ்க்கை பெரும் பாரம்பரியமாகும்.

— ஹொரேஷியஸ் போனர்

# நமது நோக்கு

## சாட்சிக்காரனும் சண்டைக்காரனும்!

பெரும்பாலும் ராணுவத்தினரே பிரயாணம் செய்த யாழ்தேவி ரயில் வண்டி தீவிரவாதிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு சுமார் 40 பேர் கொல்லப்பட்டதையடுத்து திடீரென அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்ற தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அங்கு அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ட்ஸ், ஆசிய பிராந்தியங்களுக்கான துணைஅமைச்சர் றிச்சார்ட் மேஃபி ஆகியவர்கள் உட்பட பல உயர் அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனைகள் நடத்தியுள்ளார்.

அமைச்சரின் இந்தப் பயணத்தின் நோக்கம் பற்றியோ அங்கு நடந்த பேச்சுக்கள் பற்றியோ தெளிவான விபரம் எதுவும் வெளியிடப்படாதுபோனலும், இங்கு தமிழ்ப் பகுதிகளில் இடம்பெற்று வரும் தீவிரவாத நடவடிக்கைகளை ஒழிப்பதற்கு மேலும் அதி நவீன ரக ஆயுதங்களை அவர் கேட்டிருக்கலாம், தீவிரவாத இயக்கங்களை ஒழிக்க அமெரிக்கா வேறு நாடுகளுக்கு வழங்குவது போன்று இலங்கை ரா ணுவத்தினருக்கும் பயிற்சி வசதிகளைச் செய்து தரும்படி கேட்டிருக்கலாம், கடந்த ஆண்டில் இஸ்ரேலிய ராணுவ நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றதுபோல் அமெரிக்க ராணுவ நிபுணர்களை இங்கு வந்து ஆலோசனைகள வழங்கும்படியும் கேட்டிருக்கலாம் - இன்னும் இதுபோல் பலவாறும் நாம் ஊகிக்க இடமுண்டு!

இதே சமயம் இலங்கை நிலவரங்கள்பற்றி எடுத்துக் கூறுவதற்கென வெளிநாட்டமைச்சர் ஜனப் ஏ. ஸி. ஷாஹுல் ஹமீது பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்குப் பறந்துள்ளார். இதற்கிடையில் நிதியமைச்சர் திரு. றொனி டி மெல்லும் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக செல்லும் வழியில் ஐரோப்பிய தலைநகரங்களில் இலங்கையின் இன்றைய நிலையை எடுத்து இயம்பவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பயணங்களும் முயற்சிகளும் எ தளவுக்கு பயன் அளிக்கும் என்பதை இப்போது சொல்லமுடியாவிட்டாலும், நாட்டின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் வெளிநாட்டையே இன்னமும் நாம் நம்பியிருப்பதின் அவலத்தை இது எடுத்துக்காட்டுகின்றது.

இங்கு எழுந்துள்ள நிலைமையைத் தீர்த்துக்கொள்ள வெளிநாட்டு உதவியோ, வழிகாட்டலோ தேவையில்லையென்று மார்புதட்டும் அரசாங்கம், வெளிநாட்டு ஆயுத உதவியை மட்டும் எப்படி எதிர்பார்க்க முடியும்? இங்கு இனப்பிரச்னை தீர்க்கப்படாத நிலையில் உதவிகளை வழங்கும் நாடுகள் தயக்கம் காட்டுவதும், அவர்களை "தாஜா" பண்ணுவதற்கு அமைச்சர்கள் பறப்பதும் சகஜமாகிவருகின்றது.

பிரிவினைவாதிகளுடனும், அவர்களுடன் பேச்சு நடத்துபவர்களுடனும் இலங்கை இனப்பிரச்னை பற்றி பேசமாட்டோம் என்று அடித்துக்கூறிவிட்டு இந்த இனப்பிரச்னையில் சம்பந்தமே இல்லாத நாடுகளுடன் இங்குள்ள நிலைமை பற்றி பேச்சு நடத்துவது விசித்திரமாகும்.

"சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது உத்தமம்" என்று கூறுவார்கள். வறட்டுக்கௌரவத்தை கைவிட்டு சண்டைக்காரனுடனேயே மனம்விட்டுப் பேசினல் சாட்சிக்கு வந்து உதவும்படி மாற்ருரைக் கெஞ்சவேண்டியோ, அவசியமற்ற செலவுகளை எதிர்நோக்கவேண்டியோ ஏற்படமாட்டாது.

இன்று இலங்கை அதிகாரிகள் இந்தியாவை "சண்டைக்காரனுக" சருத நியாயமில்லை. அங்கு தீவிரவாதிகள் இருக்கிருர்கள்-அவர்களுக்கு அங்கு பயிற்சியளிக்கப்படுகின்றது என்பதே இங்கு மனத்தாங்கல், இதற்கு ஆதாரம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. உலகத் தலைநகர்களில் இந்த விடயம் தான் பெரிதாக எடுத்துக் கூறப்படும். ஆனல் இந்தியாவில் 40 ஆயிரம் பேருக்கு மேல் இருந்துவரும் இலங்கை அகதிகளைத் திரும்பி வரச் செய்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்குங்கள் என்கிறது இந்தியா.

எனவே இந்தச் சிக்கல் உடைபடவேண்டுமானல் இலங்கை அரசு மேற்கு நாடுகளுக்கு அமைச்சர்களையும், தூதர்களையும் அனுப்புவதை விடுத்து இந்தியாவுடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்துவதே பயனளிக்கும் முயற்சியாகவிருக்கும்.

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பும் வழியில் திரு. லலித் அத்துலத்முதலி ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தனவின் சிறப்புத் தூதுவராக இந்தியப் பிரதமரைச் சந்திக்கவிருப்பது வரவேற்கத்தக்கது.

நிலைமைகள் மேலும் சிக்கலாகாமல் இனப்பிரச்னைக்கு விரைவாகவும் சுமுகமாகவும் தீர்வொன்று உருவாக இந்த முயற்சி உதவவேண்டும் என்பதே எமது விருப்பம்.

## சிறிமா...

[1-ம்பக்க3-ம்கலத்தொடர்ச்சி]

பிரசாரக் கூட்டத்தில் பேசிய சுதந்திரக்கட்சி தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: வடக்கிலுள்ள பிரச்னையைத் தீர்ப்பதற்கு எமதுவழி என்ன? என்பதை அறிய ஜனதிபதி விரும்புகிருர். நாங்கள் எம் தீர்வுக்கான வழியைத் தெரிவிக்கவேண்டும். நாங்கள் ஆட்சியிலிருந்தால் அப்பிரச்னைக்கு தீர்வுகாண்போம்.

"ஜனதிபதி இப்பிரச்னைக்கு தீர்வுகாணவேண்டும். அது அவரது பொறுப்பாகும். அவரால் முடியாவிட்டால் அவர் செய்யவேண்டியது ராஜினமாச்செய்துவிட்டு பொதுத்தேர்தலை நடத்துவதே. இப்பிரச்னையைத் தீர்க்க யார் தகுதியானவர்கள் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.

பொதுத்தேர்தலை நடத்தத் தற்போதுள்ள சூழ்நிலை சரியில்லை எனச் சிலர் கூறுகின்ருர்கள். ஆனல் யு என். பி. அரசு உப-தேர்தல்களை நடத்துகிறது. பொதுத்தேர்தல் நடத்த நாட்டின் நிலைமை சரியில்லை என்ருல் எப்படி உப-தேர்தல்களை ந...த்தமுடியும்."

## சகல சட்டத்...

(1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம், யன்னல்கள், கதவுகள் பூட்டியநிலையில் மிக ரகசியமாக நடைபெற்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தினரையும், அழைத்து அவ கள் கருத்தையும் அறிந்து முடிவு எடுப்பதற்காக கூட்டம் பெப்ரவரி 6ம் தேதி காலை 10 மணிவரை ஒத்திபோடப்பட்டது.

விசாரணைகளை காலவரையின்றி ஒத்திபோடுமாறு யாழ் சட்டத்தரணிகள் சங்கம் விடுத்த கோரிக்கையை நீதிசேவைககமிட்டி, ஏற்றுக்கெள்ளவில்லை. இதுதொடர்பாக நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது. (க)

## மின்கம்ப...

(1-ம்பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

கச் சென்றவர் வீடு திரும்பவில்லையென்றும் அவருக்கு 1000 ரூபா பென்சன் கிடைத்து வந்ததென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

இவர் சுமார் 10 வருடகாலமாக மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தாரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (க)

## யாருடையது

சுன்னகம் பண்டிதர் மாணிக்கத்தியாகராஜா வீதி திரு. மார்க்கண்டன் விஜயலக்ஷ்மன், கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு திருச்செல்வம், கிளிநொச்சியைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் நடேசன், சுதுமலையைச் சேர்ந்த திரு. சுப்பையா குழந்தைத்தம்பி, பன்றிசுட்டானைச்சேர்ந்த திரு காசிநாதர் பொன்னம்பலம், புத்தூர் கிழக்கு திரு வல்லி ஆழ்வான், தாவடி வடக்கைச் சேர்ந்த திருமதி சண்முகராசா விஜயலெட்சுமி, குருநகர் 1-ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த திருமதி. ஆறுமுகம் தங்கம்மா, ஆகியோரின் அடையாள அட்டைகளும், உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலை திரு கந்தசாமி பாலசிங்கத்திற்குரிய உறுதிகள், உடுவில் திரு. அ. க. சின்னத்துரையின் சைக்கிள் தகடு முதலியவை ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## பருத்தித்துறை மாணவர் பிரச்னை இன்று ஆராயப்படும்!

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்தபெண்கள் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களின் கல்விப்பிரச்னை சம்பந்தமாக ஆராய்வதற்கு கல்லூரி அபிவிருத்தி சபைகளின் கூட்டுக்கமிட்டிக்கூட்டம் இன்று வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது

பருத்தித்துறையில் பாதுகாப்புப்படை முகாம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து இம்மாணவர்களின் கல்விநிலை பாதிப்படைந்தது தெரிந்ததே.

இது சம்பந்தமாக பருத்தித்துறை பிரஜைகள் குழுவினர் வடமாநிலக் கல்விப் பணிப்பாளரை சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தைக்கு இணங்க இன்றைய இக்கூட்டம் நடைபெறவுள்ளதாக பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் துணைச் செயலாளர் திரு ஆ. தேவராஜன் தெரிவித்துள்ளார். (ரா)

## யுத்தமுனை...

(1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

முனைச்செய்திகள் வெளிவராது தடுத்தலும் உலக நாடுகளிலுள்ள வழக்கம்தான் என்று கூறிய அமைச்சர், எமது எதிரிகள் என்ன செய்கிருர்கள் என்பதையோ படையினரின் செயற்பாடு பற்றியோ செய்தி தகவல் மூலம் எதிரிகளுக்கு அறிவிப்பது யுத்தமுனையிலுள்ள படைவீரர்களுக்கு உதவாது என்ருர்.

## லொறி தீக்கிரை!

(வவனியா)

வவனியா கண்டி வீதியில் காட்டுபபகுதிக்குள் கொண்டு செல்லப்பட்டு எரிக்கப்பட்ட லொறி யாழ்.நகரிலுள்ள ஒரு பிரடல வர்த்தக நிறுவனத்திற்குச் சொந்தமானதாகும்.

இந்த லொறியின் சாரதி, கிளீனர் ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

லொறியினைக் காட்டுப்பகுதிக்குக் கொண்டுசென்றே தீயிடப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

### திருமதி மாரிமுத்து சந்தியாயி

யாழ்ப்பாணம் வண்ணர்பண்ணை பி ஏ. தம்பி ஒழுங்கை 19ம் இலக்கத்தைச் சேர்நத மாரிமுத்து சந்தியாயி காலமானர் இவர் லூறுது, அருளயி, ராயப்பன், சூசை யழ்ப்பாணம் ஷூபெலெஸ் சந்தனம், பாக்கியநாதன், செபமாலை, சந்தனமேரி திரேசம்மாள் ஆகியோரின் அன்புத்தாயார் ஆவார். பூதவுடல் இன்று 31-1-85 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னரின் இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: மா. சந்தனம்

(1612)

## மரண அறிவித்தல்

### செல்லையா அல்பிரட் துரைசிங்கம்

செல்லையா அல்பிறட் துரைசிங்கம் (Chelliah Alfred Thuraisingam Retired Excise Inspector) காலமானர். அன்னர் திவ்வியத்தின் அன்புக்கணவரும், டெய்சி ராஜதுரை, C H துரைச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமார் (Dubai), ஜடா, விஜயன் (Bank of Ceylon), அரியம் (Hently Garments Ltd) ஆகியோரின் அன்புத்தந்தையும், சீத்தா (India), தேவேந்திரன் (ஆசிரியர் டிறிபேக் கல்லூரி), சுகந்தா, வசுமதி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னரின் சேமக்கால ஆராதனை அவரது சாவகச்சேரி கச்சாய் வீதி இல்லத்தில் வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும். 1607

## மரண அறிவித்தல்

### திருமதி சூசன் தங்கரட்ணம் ரட்ணம்

திருமதிசூசன் தங்கரட்ணம் ரட்ணம்காலமானர் இவர் இராசவீதி அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலம்சென்ற திரு K. C ரட்ணத்தின் அன்பு மனைவியும், காலம்சென்ற திரு சுந்தரராஜா, காலம் சென்றதிரு. சுந்தரதேவன் சுந்தரதேவராணி (உ. அ. அ. பணிமனை கோப்பாய்) ஆகியோரின் அனபுத்தாயாரும், திரு. B. J வசந்தபாலன், திரு. B S சந்தராஜன் ஆகியோரின் பேத்தியாருமாவார், அன்னரது நல்லடக்கம் அச்சுவேலி வல்லை சேமக்காலையில் 31-1-1985 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும்.

தகவல் சுந்தரதேவராணி

1613


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.